**செய்தி வெளியீடு எண்: 220** **நாள்:02 .04.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களை இன்று (2.4.2018) தலைமைச் செயலகத்தில், மெட்ராஸ் நீரழிவு ஆராய்ச்சி நிறுவனத்தின் (Madras Diabetes Research Foundation) தலைவர் டாக்டர் வி. மோகன் அவர்கள், நீரழிவு நோய் கட்டுப்படுத்துதலில் சிறப்பாக சேவையாற்றியதற்காக அமெரிக்கன் நீரழிவு சங்கத்தால் (American Diabetes Association) 2018–ஆம் ஆண்டிற்கான ஹரால்டு ரிஃப்கின் விருதிற்கு (Harold Rifkin Award) தேர்வு செய்யப்பட்டமைக்காக சந்தித்து வாழ்த்து பெற்றார்.

இந்த ஹரால்டு ரிஃப்கின் விருதானது அமெரிக்கன் நீரழிவு சங்கத்தால் ஆண்டுதோறும், உலகளவில் நீரழிவு நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பராமரிப்பு மற்றும் வாழ்க்கை மேம்பாட்டிற்காகவும் சிறப்பாக சேவையாற்றுபவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின்போது, டாக்டர் வி. மோகன் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு, ஹரால்டு ரிஃப்கின் விருதிற்காக தனக்கு வழங்கப்பட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயுடன் தனது சொந்த பங்களிப்பான 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் சேர்த்து, மொத்தம் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 2.4.2018**